REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE : 55630

# நம் நாடு

தி.மு.க.தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

## செவ்வாய் மண்டலத்துச் சேயிழைகள்!

செவ்வாய் மண்டலத்தில் வசிக்கும் இரு இளம் பெண்மணிகளைப் பார்த்ததாக பிரெஞ்சுக் காலனி ஒன்றிலிருக்கும் ஆசிரியர் ஒருவர் கூறியிருக்கிறாராம்.

இவர் கூறும் அந்தக் கதை பிரெஞ்சுக்காரர்களிடமிருக்கும் "பறக்கும் தட்டு"க்களைப் பற்றிய செய்திகளுக்கு சிகரம் வைத்தாற்போன்றிருக்கிறது.

எம். மார்டின் என்ற அந்த ஆசிரியர், தான் ஒலோரான் எனும் தீவில் அந்த இரு செவ்வாய் மண்டலப் பெண்களைக் கண்டதாகவும், அவர்கள் 5 அடி 7 அங்குல உயரமும் பார்ப்பதற்கு வசீகரமான அழகுடைய தோற்றமும் உடையவர்களாயிருந்ததுடன், தோலினாலான தொப்பியும், செருப்பும் அணிந்திருந்ததாகவும் கூறியுள்ளாராம்.

மலர் 2] சென்னை: புரட்டாசி 27உ புதன் (13—10—54) ★ ★ வெளியூர்: புரட்டாசி 28உ வியாழன் (14—10—54) [இதழ் 104

# 30,000 தமிழர் உடனடியாக விரட்டப்படுவர்!

## டெல்லி உடன்படிக்கை அதற்கு உரிமை அளித்திருக்கிறதாம்!

### இலங்கைவாழ் திராவிடர் பிரச்சினை பற்றி கொத்தலாவலை

கொழும்பு, அக். 12—

"சாதாரண காரணங்களுக்காக இலங்கைக் குடிமகனுகப் பதிவு செய்துகொள்ள மறுத்துவிட்டவர்களின் மனுக்கள் மீண்டும் புனராலோசனை செய்யப்படும்; இந்தப் புனராலோசனைக்கு வகை செய்யும்முறையில், 'இலங்கைக் குடி மக்கள் பதிவு அதிகாரியின் தீர்ப்புக்கு அப்பீல் கிடையாது,' என்றுள்ள இலங்கைப் பிரஜா உரிமைச் சட்டத்தில் திருத்தம் செய்யப்படும்."

—என்று, இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலவாலை பத்திரிகை நிருபர்களிடையே கூறியுள்ளார்.

சமீபத்தில் இலங்கை—இந்தியப் பிரதமர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள புதிய ஒப்பந்தப்படி, இலங்கைத் தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்துவரும் 55 வயதுக்கு மேற்பட்ட 30,000 தொழிலாளர்கள் இந்தியாவுக்கு அனுப்பப்படுவார்கள்; குடியிருப்பு அனுமதி காலாவதியாகிவிட்ட எல்லா இந்தியர்களும் அவர்களுடன் இந்தியாவுக்கு அனுப்பப்படுவர்.

"புதிய ஒப்பந்தத்தை அமுல் நடத்தும் ஏற்பாடுகளில், இலங்கை ஜனநாயகக் காங்கிரசுக்கும் பிரதிநிதித்துவம் அளிக்கப்படக்கூடும்; இலங்கைக் குடி மக்களாக போதிய இலங்கை—

(தொடர்ச்சி 4-ம் பக்கம் பார்க்க.)

## பாகிஸ்தானில் அடுத்த ஆண்டில் பொதுத் தேர்தல்

### புதிய அரசியல் சட்டப்படி நடைபெறுமாம்

பாகிஸ்தானின் புதிய அரசியல் சட்டப்படி, பாகிஸ்தான் முழுவதுக்குமாக பொதுத் தேர்தல் அடுத்த ஆண்டில் நடைபெறும் என்று பாக். மத்திய அரசாங்க உணவு—தொழில் இலாக்கா மந்திரி கான் அப்துல் கய்யூம் கான் அறிவித்தார்.

பாகிஸ்தான் அரசியல் சட்ட நகல் தயாராகிவிட்டதென்றும், அரசியல் நிர்ணய சபை முன் அது அக்டோபர் 28-ந் தேதியன்று வைக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

## மேற்கு ஜெர்மனி உரிமை பெற பிரான்ஸ் ஒப்பும்!

### சோவியத் விருப்பத்திற்கு ஏமாற்றம்

### பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ் மீது நம்பிக்கை தெரிவித்து பிரெஞ்சு தேசிய சபை தீர்மானம்

பாரிஸ், அக். 12—

மேற்கு ஜெர்மனி மீண்டும் ஆயுதபாணியாவதற்கும், முழு சுதந்திரம் பெறுவதற்குமான லண்டன் ஒப்பந்தத்திற்காக, பிரெஞ்சு தேசிய சட்ட சபை, பிரதமர் மெண்டஸ் பிரான்சின் மீது நம்பிக்கை தெரிவித்து ஓட்டளித்தது.

நம்பிக்கைத் தீர்மானத்திற்கு ஆதரவாக 350 ஓட்டுகளும், எதிராக 113 ஓட்டுகளும் பதிவானதாகவும், நம்பிக்கைத் தீர்மானம் 237 ஓட்டுக்களைப் பெருவாரியாகப் பெற்று நிறைவேறியதாகவும் அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் மூன்று மணி நேரம், விவாதிக்கப்பட்டதாம்.

இதன் மூலம், ஐரோப்பியப் பாதுகாப்புத் திட்டம் உருவாவதில் இருந்த பெரும் தடைக்கற்கள் விலக்கப்பட்டுவிட்டதாகவும் சொல்லப்படுகிறது.

தீர்மானத்தை ஒட்டி நடைபெற்ற விவாதத்தின்போது பிரதமர் மெண்டஸ் பிரான்ஸ், இப்போது ஒன்பது நாடுகள் மேற்கொண்டிருக்கிற ஒப்பந்தத்தின் நகல்களைப் பரிசீலிப்பதற்காக, அடுத்த வாரம் கூடும் சர்வதேச மாநாட்டில் இன்னும் சலுகைகள் பெறுவதற்கு தம்மால் முயற்சிக்க முடியாதெனவும் கூறியதாகத் தெரிகிறது.

இந்தப் புதிய ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்த பிறகு, இதனிலும் முற்போக்கானதொரு, ஐரோப்பிய, பொருளாதார, அரசியல் இணைப்புக்கான திட்டமொன்று தேவை என்று, அந்த சர்வதேச மாநாட்டில் தான் வலியுறுத்தச் சம்மதிப்பதாகவும் மெண்டஸ் பிரான்ஸ் கூறினாராம்!

## பதவியைப் பலப்படுத்த நேருவின் புதிய முயற்சி!

### 'அதிர்ச்சி மருத்துவ'ப் புரளியை மீண்டும் கிளப்புகிறார்!

புதுடில்லி, அக். 12—

பிரதம மந்திரி பதவியிலிருந்து, தான், தற்காலிகமாக ஓய்வெடுத்துக் கொள்வது பற்றி, மாநில அரசாங்கப் பிரதமர்களின் கருத்தை அறிவிக்குமாறு, பண்டித நேரு எல்லா மாநில முதல்வர்களுக்கும் கடிதம் அனுப்பியுள்ளார் என்று தெரிகிறது.

தனது கடிதத்தில், தான் ஓய்வு எடுத்துக்கொள்ளும் திட்டத்திற்கான காரணங்களையும் விளக்கியுள்ளாராம்.

காங்கிரஸ் தலைமைப் பதவியை துறப்பதுகுறித்து எல்லா பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கும் பண்டிதர், அகில இந்திய காங்கிரஸ் தலைவர் என்ற முறையில் எழுதியுள்ள கடிதமும் இன்று வெளியாகியுள்ளது.

தனக்குப் பிறகு, இந்திய தேசத்தின் தலைமையை மேற்கொள்ளவும், பிரதம மந்திரியாயிருந்து பணியாற்றவுமாக ஒருவரைத் தயார் செய்யவேண்டிய பிரச்னை குறித்து பண்டிதநேரு எவ்வளவு சிரத்தையுடனும், கவலையுடனும் யோசித்து வருகிறார் என்பதற்கு ஒரு அறிகுறியாக, இப்போது, அவர், மாநில முதன் மந்திரிகளுக்கு எழுதியுள்ள கடிதம் இருக்கிறதென்று சொல்லப்படுகிறது.

பண்டித நேரு, அகில இந்திய காங்கிரஸ் தலைவர் பதவிக்கும், பிரதம மந்திரி பதவிக்கும் தகுதியுடையவர்கள் யாரென்று தம் மனதில். கொண்டிருக்கிறார் என்பது இன்னமும் ஒரு சிறிதும் தெரியவில்லை.

★

## தாதுலிங்க (முதலியார்) மறைவு!

சென்னை, அக். 13—

பழம் பெரும் சுயமரியாதை இயக்கத் தலைவர்களுள் ஒருவரான காலஞ் சென்ற திரு. சி. நடேச முதலியாரின் சகோதரரும், சென்னை நகர முன்னாள் மேயருமான திரு. சி. தாதுலிங்க (முதலியார்) இன்று காலை இயற்கையெய்தினார் என்ற செய்தியை மிக வருத்தத்துடன் வெளியிடுகிறோம்.

அவர், கோவை அரசினர் விவசாயக் கல்லூரித் தலைவராக அரும்பணியாற்றியபின், 1937ல் ஓய்வு பெற்றதும் நகர சபை முன்னேற்றத்தில் அக்கரை கொண்டவராய் சேப்பாக்கம் வட்ட நகர சபை உறுப்பினராக 15 ஆண்டுக்காலம் பெருமைக்குரிய பணியாற்றியிருக்கிறார்.

1942ல் சென்னைநகரமேயராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார். அயனாவரம் கூட்டுறவு பால் வினியோகச் சங்கத்தின் தலைவராகவுமிருந்து பணியாற்றிய ஒரு பெருந்தகையை திராவிடர் இழந்துவிட்டது, ஈடு செய்ய இயலாத நட்டமாகும்.

அன்னாரை இழந்து தவிக்கும் அவரது குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம். நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். —ஆ-ர்.

## இந்தியா நான்காவது வல்லரசாகும் தகுதி பெற்றதுதானா?

### கும்பமேளாவும், கும்பகோணம் மகாமகமும் உலக சம்பிரதாயமோ?

### சென்னையில் கருணாநிதி கேள்வி

"பண்டித நேரு அண்மையில் கூறியிருக்கிறார்—'இந்தியா எதிர்காலத்தில் உலகத்தின் நான்காவது வல்லரசாக இருக்கும்,'—என்று! அந்தச் செய்தி வெளிவந்த அதே செப். 30-ந் தேதியன்றே, 'திருப்பதி குடை பிடித்துக்கொண்டு சென்ற 45 வயது மனிதர், 'கோவிந்தா, கோவிந்தா' என்று கூவிக்கொண்டே, சென்னை சைனு

(4-ம் பக்கம் பார்க்க)

## திரு-கொச்சி நிதி மந்திரி

### ராஜினாமாச் செய்வார்?

திரு—கொச்சி சர்க்கார் நிதியமைச்சர் பி. எஸ். நடராச பிள்ளை தமது பதவியிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று கூறப்படுகிறது.

திரு—கொச்சி முதன் மந்திரியிடம் அவர் தமது ராஜினாமாக் கடிதத்தைச் சமர்ப்பித்துவிட்டதாகவும், பதவி விலகுதலின் அங்கீகாரத்திற்காக அவர் காத்துக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## காங்கிரசின்-தலைவராகப் போட்டியிடமாட்டேன்!

### பிரதேச காங்கிரஸ் தலைவர்களுக்கு நேரு அறிக்கை!

புதுடில்லி, அக். 12—

அடுத்து வருகிற காங்கிரஸ் கட்சியின் தலைமைப் பதவிக்கான தேர்தலில், தான் போட்டியிடப் போவதில்லை என்று எல்லா பிரதேச காங்கிரசின் தலைவர்களுக்கும் பண்டித நேரு அனுப்பியுள்ள சுற்றறிக்கை ஒன்றில் கூறியுள்ளார்.

சில காலத்திற்கு நாட்டின் பிரதமர் பதவியிலிருந்து ஓய்வு பெறுவதை, தான் விரும்பியதின் காரணம் என்ன என்பதையும், தனது சுற்றறிக்கையில் பண்டிதர் விளக்கியுள்ளார்.

'நேருவிற்குப் பின் யார்?' என்ற கேள்வி இப்போது நாட்டிலே எழும்பியுள்ளதாகவும், அந்தச் சவாலை தான் ஏற்றுக் கொள்வதாகவும் அவர் குறிப்பிட்டு, 'சிந்திக்கவும், படிக்கவும் தனக்கு அதிக நேரம் தேவை' என்று பண்டித நேரு மேலும் குறிப்பிட்டுள்ளார்.

குவெமாய் தீவில் உள்ள சியாங் படையினருக்கும், அமாய் தீவிலுள்ள சீனக் கம்யூனிஸ்டு படையினருக்குமிடையே மீண்டும் பீரங்கிப் பிரயோகம் நடைபெற்றதாகத் தெரியவருகிறது.

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணதுரை

சென்னை 13—10—1954 புதன்


# வேதனை தரும் விசித்திரம்!

டெல்லியில் இந்தியா—இலங்கை பிரதமர்கள், இலங்கை வாழ் தமிழர்களின் எதிர்காலம் குறித்து ஒரு முடிவிற்கு வந்துவிட்டார்கள். அதற்கான உடன்படிக்கையில் இருவரும் கைசாத்தும் வைத்துவிட்டார்கள்!

இப்பொழுது இருநாட்டுக்குமிடையில் ஏற்பட்டுள்ள உடன்படிக்கை ஒன்றும் புதியதல்ல. இவ்வாண்டு ஜனவரி திங்களில் செய்துக் கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் மறுபதிப்பே இந்த இரண்டாம் ஒப்பந்தம்!

ஜனவரியில் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையானது, இலங்கையில் உள்ள "இந்திய பரம்பரையினர்" எதிர்காலத்தை நிர்ணயிப்பதில் எந்த அளவு துணைபுரிந்து இருக்கிறது என்பதை எல்லோரும் அறிவர். எனவே, முதல் ஒப்பந்தத்தைப்போலவே எல்லா வகையிலும் ஒத்து இருக்கும் இரண்டாவது ஒப்பந்தத்தில் அதிகமான நம்பிக்கை வைப்பது என்பது இலகுவானதல்ல.

இலங்கையில் உள்ள 'இந்திய பரம்பரையினர்' என்பவர்கள் பெரும்பாலும் திராவிட இனத்தவராவர் என்பது வெளிப்படை. இன்று இலங்கையில் உள்ள திராவிட மக்களின் மூதாதையர், சொந்த விருப்பத்தினுல் அங்கு சென்றவர்கள் அல்ல. இந்தியத் துணைக் கண்டமும், இலங்கை தீவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியப் பிடியில் சிக்கிக் கிடந்த நேரத்தில், தங்கள் பொருளாதாரச் சுரண்டலுக்குத் துணை செய்வதற்காக, இங்கிருந்து திராவிட மக்களைக் குடும்பம் குடும்பமாக, 'கூலி'களாக ஓட்டிச் சென்றனர். அதன் பிறகும், சமீப காலம்வரை, அதைத் தொடர்ந்து, இங்கிருந்து 'கூலி' குடியேற்றம் நடைபெற்று வந்தது.

ஆங்கிலேயர் ஆட்சியில், இக்'கூலி' வாழ்வு திராவிடப் பெருங்குடி மக்களுக்கு ஏற்பட்டதில் வியப்பில்லை. ஆனல், அதே 'கூலி' வாழ்வைச் சுமந்து கொண்டிருக்க வேண்டிய கட்டாயம், ஆங்கில ஏகாதிபத்தியம் இம்மண்ணை விட்டுத் தொலைந்து, பாரத் சுதந்திர ஆட்சியாக எழுந்த பின்னரும், ஆங்கில தோட்ட முதலாளிகளால் தங்கள் சுயநலம் கருதி, வலுக்கட்டாயமாகக் கடத்திச் செல்லப்பட்ட, இலங்கை வாழ் திராவிடப் பெருங்குடி மரபினருக்கு இருந்துவருவதுதான், வியப்பிலும் வியப்பாகும்!

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கும் இலங்கைத் தீவிற்கும் ஏற்கனவே இருந்துவந்த அரசியல் உறவில் ஏற்படுத்தப்பட்ட கணிசமான மாற்றத்தால், புதிய அரசியல் உரிமை பெற்றதும், இப்பொழுதும், இனி எப்பொழுதும் தங்களுக்குத் தேவைப்படுகிற திராவிட 'கூலி'களை மட்டும் வைத்துக் கொண்டு, மற்ற இலட்சக் கணக்கான திராவிட மக்களைத் துரத்திவிட கங்கணம் கட்டிக் கொண்டது. அதை உடனடியாகச் செயலாற்ற, அதற்கான குடியேற்ற, குடியுரிமை சட்டங்களையும் இலங்கை அரசு உருவாக்கிக்கொண்டது. ஒரு தேசிய சர்க்காருக்குள்ள இலக்கணப்படி இலங்கைத் தீவு, இலங்கைத் திராவிடர்களிடம் நடந்துகொள்ளுகிறது—என, இலங்கை அரசியல்வாதிகள், தங்களுடைய கொடுஞ்செயலுக்கு சமாதானம் கூறிக்கொள்ளுகிறார்கள். அது எவ்வளவு தூரம் நியாயமானது என்ற ஆராய்ச்சி ஒரு பக்கம் இருக்க, ஆங்கில ஏகாதிபத்தியத்தினிடமிருந்து அரசியல் உரிமை பெற்ற இந்திய அரசு, ஆங்கில ஏகாதிபத்தியத்தின் ஒப்புதல் மீது, பலவந்தமாக ஓட்டிக் கொண்டு போகப்பட்ட இலங்கையில் இருக்கும் இந்தியர்களுக்கு—இல்லை — திராவிடர்களுக்குச் செய்ய வேண்டிய தனது கடமையையாற்ற, தன்னிச்சையாக என்றாவது முனைந்திருக்கிறதா என ஆராய்ந்து பார்ப்பதுதான் இன்றியமையாததாகும்.

அரசியல் உரிமை பெறுவதற்குமுன் கடல் கடந்து சென்றுள்ள 'இந்தியர்' படும் துயர் குறித்து, 'கரும்புத் தோட்டத்திலே' என்ற பாரதியின் கீதத்தை இசைக்காத நாக்கு, கேட்காத செவி, எண்ணுத நெஞ்சம், காங்கிரஸ் கட்சியினரிடம் காணப்பட்டதுண்டா? ஆங்கில ஏகாதிபத்தியம் திணித்த அடிமை வாழ்வைப் பெற்றுள்ள நேரத்தில், கடல் கடந்த 'இந்தியர்' பற்றி காங்கிரஸ் கட்சியினர் ஒப்பாரி வைத்து அழுததற்கொப்ப, அரசியல் உரிமை தங்கள் கைக்கு மாறினதும், கடல் கடந்த 'இந்தியர்'. துயர் துடைக்க, தாமாக முயன்று வெற்றி பெற்றிருக்க வேண்டாமா? மேற்கொண்டனரா, அம்முயற்சியை?

"ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்றுவிட்டது நம் 'புனித பூமி'யை விட்டு; இருநூறு ஆண்டுக்காலமாக நம்மைப் பீடித்திருந்த அடிமை விலங்கு அறுத்தெறியப்பட்டது; புதிய அந்தஸ்தை நாங்கள் பெற்றிருக்கிறோம்; ஆடு மாடை ஏற்றிச் செல்லுவது போல ஆங்கிலேயர்கள் கடலுக்கப்பால் கூட்டிச் சென்ற நீங்களும், அப்புதிய அந்தஸ்தில் பங்கு பெறவாரீர்—வீடு திரும்புவீர்" என அழைத்திருக்க வேண்டும் ஆங்கில ஏகாதிபத்தியத்தின் வாரிசாக, அதுவிட்டுச் சென்ற இடத்தை அலங்கரித்த அகில இந்திய காங்கிரஸ்! அப்படி அழைத்திருக்க வேண்டாம் முழு விருப்பத்தோடு! வெறும் உபசாரத்திற்காக வாவது அழைத்திருக்க வேண்டுமே, அழைத்ததா, அழைக்கவாவது நினைத்ததா—அகில இந்திய காங்கிரஸ்? இல்லையே—எடுத்துக் காட்டுக்கும் இல்லையே!

ஆங்கிலேயர் தூக்கிச்சென்ற எமது 'இந்தியர்'களால், உங்கள் காடு திருந்தியது! வரப்பு உயர்ந்தது—வளம் பெருகியது! அழகியசாலையும் சோலையும், அணிநகரங்களும், விண்முட்டும் அழகிய மாடமாளிகையும், எங்கள் இந்திய 'கூலி'களின் கை வேலை! அவர்களை என்றும்போல் ஆதரிப்பீர்! அவர்களுக்குப் பொல்லாங்கு தேடாதீர்! விரட்டாதீர்! வெளியேற்றுதீர்! தீங்கிழைத்து, 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டு, உய்வில்லை செய்நன்றி கொன்ற மக்களுக்கு' என்ற வள்ளுவன் வாயுரையை நம்மவரைத் துன்புறுத்தும் இலங்கை போன்ற பிற நாட்டு அரசுகளுக்குத் தூது அனுப்பும் திருப்பணியை அல்லவோ, பிரிட்டிஷ் மன்னர்பிரானிடமிருந்து, கோலும் கொலு மண்டபமும் பெற்ற, மாட்சிமை தங்கிய மண்டலாதிபதியான, ஆசிய ஜோதியாம் அலகாபாத் பண்டிதர், ஒவ்வொரு விநாடியும் செய்துவருகிறார். இதை நோக்கும்பொழுது, நமக்கு வெட்கமாகவும் இருக்கிறது—வேதனையாகவும் இருக்கிறது!

இந்தியத் துணைக்கண்டம் இரு துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு, அத்துண்டுகளில் இந்தியா—பாகிஸ்தான் என்ற பெயரிய இரு அரசுகள் எழுந்தபோது, அதுவரை பாகிஸ்தான் பகுதியைத் தாயகமாகக்கொண்டு வாழ்ந்தவர்கள், மேற்குப் பாஞ்சாலத்திலிருந்தும் கிழக்கு வங்காளத்திலிருந்தும் எறும்புபோல் சாரை சாரையாக சுதந்திர இந்தியா புகுந்தனரே இலட்சக்கணக்கான மக்கள், அவர்களை, அவர்கள் பிறந்த பாகிஸ்தான் பகுதியிலேயே இருங்கள்; இங்கு ஏற்கோம் — இடந் தரோம்—என்று பட்டாளத்தைவிட்டு, பண்டிதர் ஆட்சி விரட்டியடித்ததா? இல்லையே!

மேற்கு பாஞ்சாலத்திலிருந்தும், கிழக்கு வங்கத்திலிருந்தும் இலட்சக்கணக்கில் ஓடிவந்தபொழுது, அப்பகுதிகளை வாழத்தக்க வளமுள்ளதாக ஆக்கினவர்கள் அம்மக்கள் தான்; அவர்கள் ஓட்டத்தைத் தடைசெய்து, திரும்ப அவர்கள் ஊர்களுக்கு அழைத்துச் செல்லுங்கள் என, பாகிஸ்தான் சர்க்காருக்கு பண்டிதர் காவடி தூக்கவில்லை! இதோபதேசம் செய்யவில்லை! மாருக, வந்தவர்களை வரவேற்று, வாழ்வு தந்தார் — தந்துக் கொண்டும் இருக்கிறார் பண்டிதர்!

பிறர் நெஞ்சை அள்ளும்'அகதிகள்' என்ற பெயரை சூட்டி, பிணியாளர்களுக்கு பணிவிடை செய்யும் நவீன தாதியைப் போன்று, பரிவும் பாசமும் காட்டி — கனியும் சத்தான உணவும் தின்னக் கொடுத்து, சண்டித்தனம் செய்பவர்களிடம் கொஞ்சிக் குலாவி, இன்னமுது வாயில் ஊட்டி, தாலாட்டியல்லவோ இன்றும் பேணி வருகிறது பெருமை மிக்கப் பண்டிதர் செங்கோல்!

தொழிலுக்கு மூலதனம்—உழைக்க சிறுசிறு தொழிற்சாலைகள்—சிறுர்களின் கல்விக்கு சிறந்த ஏற்பாடு நோய் நீங்க இனமாக உயர்ந்த மருந்து—வியாபாரம்புரிய பண உதவி—இன்னேரன்ன சலுகைகளை எல்லாமல்லவோ, டெல்லி சர்க்கார் அகதிகளுக்குச் செய்து வருகிறது! அகதிகள், டெல்லி ஆட்சியின் தத்துப் பிள்ளைகளாகவல்லவோ பாவித்து நடத்தப்பட்டு வருகின்றனர்!

ஏறத்தாழ அகதிகள் தொகை எழுபத்து மூன்று இலட்சம்; இதுவரை அவர்களுக்குஇந்திய சர்க்கார் செலவழித்துள்ள பணம் 240 கோடி ரூபாய்!

அகதிகள், அகில இந்திய காங்கிரசின் சிறப்புச் சிருஷ்டி! வடநாட்டினர் என்ற பட்டியலில் உள்ளவர்கள்!

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் சிறப்பு சிருஷ்டி, இலங்கை வாழ் திராவிட 'கூலி'கள்! அன்று, ஏகாதிபத்திய ஆட்சியில் 'கூலி'கள் என்ற இழிபெயர் தரப்பட்டது, கடல் கடந்த திராவிடப் பெருங்குடி மக்களுக்கு! ஆனல் இன்றே, டெல்லி ஆட்சியில் 'நாடற்ற அனதைகள்' எனப் பெயரிடப்படுகிறது, இலங்கையில் உள்ள திராவிட மரபினருக்கு!

அங்கே உள்ளனர், இன்றைய தினம், நமது பரிதாபத்துக் குரியவர்களான எட்டு லட்சம் திராவிட மரபினர்! அவர்களில், பெரும்பாலோரை 'அனதை'கள் எனத் திமிர் கொண்டு கூறுகிறது இலங்கை அரசு! 'ஆமாம்! ஆமாம்!' என கட்டியம் கூறுகிறது, டெல்லி அரசு!

டெல்லியின் போக்கில், அறிவுடைமையும் இல்லை—அன்புடைமையும் இல்லை!

மேற்கு பாஞ்சாலத்திலிருந்தும், கிழக்கு வங்கத்திலிருந்தும், பாகிஸ்தான் மண்ணிலேயே இருந்து வாழ முடியாது, தங்கள் பரம்பரை பண்புக்கொப்ப, ஓடிவந்த 73 இலட்ச மக்களை ஏற்றுக் கொண்டு, வசதியான இடமளித்து, 240 கோடிக்கு மேல் பெருந் தொகையைச் செலவழித்து, மேலும் கோடிக் கணக்கில் செலவிட பணமொதுக்கி இருக்கும் பண்டிதர் சர்க்காருக்கு, இலங்கையில் இலட்சக் கணக்கில் இரத்தக் கண்ணீர் சொரிந்துகொண்டிருக்கிற திராவிட மரபினரை, தாயகத்துக்கு அழைத்துக் கொள்ள, ஆசையுமில்லை—அக்கரையுமில்லை! வேதனை தரும் விசித்திரம்!

# பருத்தி விலை நிர்ணயிப்பதில்...

## யூனியன் சர்க்காரின் ஓரவஞ்சனை!

### தேனியில் தோழர்கள் கண்டனம்

"மதுரை மாவட்டத்தில் உள்ள தேனியில் விளையும் பருத்தி கண்டி ஒன்று ரூ. 826 ஆகவும், அதே பருத்தி பம்பாயில் விளையும்போது கண்டி ஒன்று ரூ. 1100 ஆகவும், யூனியன் சர்க்காரால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தென்னுட்டவர்மீது என் மத்திய அரசாங்கம் இப்படி ஓரவஞ்சனையுடன் நடந்துகொள்கிறது என்பதை எண்ணிப் பார்த்தால், 'திராவிட நாடு, திராவிடருக்காக வேண்டு'மென்ற லட்சியம், வெகுநியாயமானதேயாகும் என்பதை நன்கு உணர முடியும்," என்று, தேனியில் கடந்த 6-10-54 அன்று நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய தோழர் வீ. வை. குருசாமி குறிப்பிட்டார்.

பின் மல்லிகா என்ற சிறுமியும், தோழர் எம். ஆர். கணேசனும் சிறிது நேரம் பேசியதும் தோழர் என். வி. நடராசன் அவர்கள் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அவர் பேசுகையில், திராவிட நாடு லட்சியத்தை விரிவாக விளக்கியும், வருகிற பொதுத் தேர்தலில் தி. மு. கழகம் பங்கு பெறக்கூடும் என்றும், காங்கிரசை தி. மு. கழகம் ஆதரிக்கிறது என்ற குற்றச் சாட்டிற்கு முகாந்திரமே கிடையாதெனவும், கவர்னர் சம்பளம் குறைக்கப்படுவதற்கான போராட்டம் துவக்குவது பற்றி ஆலோசனைகள் நடந்து கொண்டிருப்பதாயும் கூறி, அரியதோர்உரை நிகழ்த்தினர். (ந. நி.)

# கிராமங்களுக்கு மின்சார வினியோகம்

## 60 லட்சம் செலவிடப்படும்

சென்னை மந்திரி சபைக் கூட்டத்தில், கிராமங்களுக்கு மின்சார விநியோகத்துக்கான 16 திட்டங்கள் அங்கீகரிக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி, மின்சார விநியோகத்துக்காக ரூ. 60 லட்சம் செலவிடப்படுமாம். சென்னை மின்சாரத் திட்டத்தின் கீழ் செங்கற்பட்டு மாவட்டத்தில் ரூ. 13 லட்சத்தில் 4 திட்டங்களும், மேட்டூர் மின்சாரத் திட்டத்தின் கீழ் சேலம், வட ஆற்காடு, திருச்சி, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களுக்கு ரூ. 21 லட்சம் செலவில் 7 திட்டங்களும், பாபநாசம் மின்சாரத் திட்டத்தின் கீழ் திருநெல்வேலி, மதுரை மாவட்டங்களுக்கு ரூ. 7 லட்சம் செலவில் ,2 திட்டங்களும், பைகாரா திட்டத்தின் கீழ் மலபார், கோயம்பத்தூர், மதுரை ஆகிய மாவட்டங்களுக்கு ரூ. 19 லட்சம் செலவில் 3 திட்டங்களும் நிறைவேற்றப்படும்.

# சாலைகளைச் செப்பனிட ரூ. 3½ லட்சம்

சென்னை நகரத்தின் சுற்றுப்புறங்களிலுள்ள பழுதுபட்ட சாலைகளை அபிவிருத்தி செய்வதற்காக, ரூ. 3½ லட்சத்தை சென்னை சர்க்கார் ஒதுக்கியிருப்பதாகத் தெரிகிறது.

பூந்தமல்லி—ஆவடி சாலையில் உள்ள பழுதுபட்ட பாலம் சரிக்கட்டப்படும் என்றும், சென்னை—கல்கத்தா பெரிய சாலையில், புழலேரி வரையில் தார் பூசப்படும் என்றும், அம்பத்தூர்—ஆவடி சாலை புதுப்பிக்கப்படும் என்றும், சென்னை—ஆவடி — திருவள்ளூர் சாலை விரிவாக்கப்படும் என்றும், பூந்தமல்லி—ஆவடி சாலை செப்பனிடப்படும் என்றும், சென்னை—திண்டுக்கல் சாலையில் பாலாறு பாலம் வரையிலும், மகாபலிபுரம் சாலையும் பழுதுபார்க்கப்படும் என்றும் தெரிகிறது.

# உயர்நிலைக் கல்வி

## ஆராய நால்வர் குழு

டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியாரைத் தலைவராகக் கொண்ட இடைத்தர கல்விக்குழுவின் சிபாரிசுகளை சென்னை மாநிலத்தில் அமுல் நடத்துவது பற்றி யோசனை கூற, சென்னை சர்க்கார் 'நால்வர் குழு' ஒன்றை நியமித்திருப்பதாகத் தெரியவருகிறது.

இந்தக் குழுவுக்கும் டாக்டர் ஏ. லட்சுமணசாமி அவர்களே தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

அந்தக் குழுவின் மற்ற உறுப்பினர்களாக சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிப் பள்ளித் தலைவர் டி. பி. சந்தானகிருஷ்ண நாயுடுவும், தெ. இ. ஆசிரியர் சங்கத் தலைவர் எஸ். நடராசனும், சென்னை மாநில கல்வி இலாகா டைரக்டரும் நியமிக்கப்பட்டுள்ளனராம்.

# முன்னாள் ஒப்பந்தத்திற்கு புதிய சிங்காரிப்பு!

## பிரச்சினை ஒத்திப்போடப்பட்டது!

## இலங்கை—இந்தியப் பிரதமர்கள் பேச்சுவார்த்தை முடிவு

புதுடில்லி, அக். 11—

இலங்கை—இந்தியப் பிரதமர்கள் இருவரும் நேற்றிரவு செய்து கொண்ட ஒப்பந்தப்படி இலங்கையில் உள்ள "நாடற்றவர்" தொகையைக் குறைப்பதற்கு, இந்தியப் பிரஜைகள், இலங்கைப் பிரஜைகள் என்று பதிவு செய்யும் வேலையைத் துரிதப்படுத்துவது என்று உறுதி மொழி பூண்டிருக்கின்றனர்.

"நாடற்றவர்" பற்றிய பிரச்னையில் எற்கனவே இரு அரசாங்கங்களிடமுமிருந்த அடிப்படை கருத்து வேற்றுமை இன்னமும் இருக்கத்தான் செய்கிறது.

இலங்கைப் பிரஜா உரிமை மறுக்கப்படுகிற எல்லா இந்தியர்களும் இந்தியப் பிரஜைகளாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்ற இலங்கையின் கருத்தை இந்தியா நிராகரித்துவிட்டது.

இப்போது உருவாகியுள்ள ஒப்பந்தமெல்லாம், ஒருவரின் கருத்துக்களை மற்றவர் புரிந்துகொண்டு இன்று, இலங்கையராகவோ, இந்தியராகவோ இல்லா திருக்கிற "நாடற்றவர்" தொகையை வெகுவாகக் குறைப்பதற்கு, சம்மந்தப்பட்ட அரசாங்கங்கள், குடிஉரிமைப் பதிவைத் துரிதப்படுத்த வேண்டும் என்பதுமட்டும்தான்.

இன்னும் இரண்டாண்டு காலத்திற்குப் பின் மீண்டும் இந்தப் பிரச்னையை பரிசீலனை செய்யலாமெனவும் முடிவாகியுள்ளது.

அந்த இரண்டாண்டிற்குள் குடிஉரிமை கோரி வந்துள்ள மனுக்களத்தனையையும் 'பைசல்' செய்ய பெருமுயற்சியும் மேற்கொள்ளப்படுமாம்.

இந்த இரண்டாண்டு காலத்தில் இலங்கை குடிஉரிமை கோரி மனுச் செய்திருப்பவர்களின் மனுக்கள் பைசல் செய்யப்படாமலிருந்தாலும்கூட, அவர்களுக்கு, குடிஉரிமை வழங்கப்பட்டவர்களைப் போலவே, தாயகத்திற்குப் பணம் அனுப்புதல், இடையில் தாயகம் சென்று வர அனுமதி அளித்தல் போன்ற வசதிகளை வழக்கம்போல், தடையேதுமின்றிச் செய்து தர இலங்கை அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளதாம்.

இந்திய அரசாங்கமும், ஒருவர், இலங்கைக் குடி உரிமை கோரி மறுக்கப்பட்டவராயிருந்தாலும் அவர் இந்தியப் பிரஜா உரிமை கோரி மனுச் செய்துகொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு உரிமை தர அனுமதிப்பதாகவும் உறுதி பூண்டுள்ளதாம். மேலும், அத்தகையோருக்கு அப்படி இந்தியப் பிரஜைகளாகும் உரிமை தரப்பட்டிருப்பதாக மக்களுக்கு அறிவிப்பதற்கான விளம்பரங்களையும் செய்வதாக இந்திய அரசாங்கம் உறுதி தந்துள்ளது.

இந்த புதிய ஒப்பந்தம் நிறைவேறியது குறித்து இரு அரசாங்கங்களும் மகிழ்ச்சி தெரிவித்திருந்தாலும்கூட, ஒப்பந்தம், பிரச்சினைக்குரிய சரியான பரிகாரந்தான் என்று சொல்வதற்கில்லை என்ற அதிருப்தியும் இருதரப்பினரிடை உரிமை கோரி வந்துள்ள மனுக்களிடையேயும் நிலவுவதாகவும் தெரிகிறது.

## பார்மோசாவில் ஆக்கிரமிப்பு

## அமெரிக்கா மீது புகார்

### ஐ. நா. - வுக்கு சீனப்-பிரதமர் கடிதம்

"பார்மோசா தீவுமீது, அமெரிக்கா 7 தடவைகள் ஆக்கிரமிப்புச் செய்துள்ளது என்று கம்யூனிஸ்டு சீனா, ஐ. நா.-வில் புகார் ஒன்றைச் சமர்ப்பித்திருக்கிறது என்று தெரிகிறது.

ஐ. நா. பொதுக் காரியதரிசிக்குச் சீனப் பிரதமர் சூ-யென்-லாய் அனுப்பியிருக்கிற இந்தப் புகாரில், '1950-ல் அமெரிக்க இராணுவ ஆக்கிரமிப்புப் பற்றி சீனாகொடுத்த புகார் பைசலாகாமல் இருக்கிறதென்றும், ஐ. நா. சாசனப்படி அமைதியை நிலை நிறுத்தும் நடவடிக்கைகள் எடுக்க அமெரிக்காவின் நிர்ப்பந்தத்தின் காரணமாக ஐ. நா. சபை தவறிவிட்டதென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சீனப் பிரதமரின் இந்தப் புகார் இன்னும் ஐ. நா.-வுக்குக் கிடைக்கவில்லை யென்றும், ஐ. நா. - வில் உறுப்பினராகவுள்ள எதாவது ஒரு நாடு இந்தப் புகாரை ஐ. நா. சபையில் தாக்கல் செய்தால்தான் அது, சீனாவின் புகார்மீது நடவடிக்கை எடுக்கும் என்றும் சொல்லப்படுகிறது.

## கர்நாடக மாநில அமைப்பு

## மைசூர் சட்டசபையில் கேள்விகள்

பெங்களூர், அக். 11—

ஐக்கிய கர்நாடகம் பற்றி இன்று மைசூர் சட்ட சபையில் பலகேள்விகள் கேட்கப்பட்டன.

எதிர்க் கட்சித் தலைவர் முகமது இமாம் அவர்களின் கேள்விகளுக்குப் பதில் அளிக்கையில், கர்நாடக மாகாண அமைப்பு பற்றி சட்ட சபையிலும், மைசூர் மாநில மக்களிடையேயும் கருத்துவேற்றுமை நிலவுகிறது என்றும், மாநிலப் புனரமைப்புக் குழுவிடம் மைசூர் சர்க்கார் அறிக்கை எதும் இதுவரை தரவில்லை என்றும், மாநில புனரமைப்புக் குழு தனது அறிக்கையைத் தயார் செய்ய இன்னும் சுமார் ஒரு ஆண்டுகாலம் உள்ளதென்றும், அதற்குள் மைசூர் சர்க்கார் நியமித்துள்ள புள்ளி விபரக் குழுவின் அறிக்கை மைசூர் சர்க்காருக்குக் கிடைக்குமென்றும், அந்த அறிக்கை கிடைத்த பின்னர் கர்நாடக மாநில அமைப்பு பற்றி சர்க்கார் தன் கருத்தை மாநிலப் புனரமைப்புக் குழுவிடம் தெரிவிக்குமென்றும், முதல் அமைச்சர் அனுமந்தையா பதில் அளித்தார்.

## சியாங் - கே - ஷேக் கொக்கரிப்பு!

## சீனாவை கம்யூனிஸ்டுகளிடமிருந்து விடுவிக்க வேண்டுமாம்!

டாக்டர் சன்-யாட்-சன் தலைமையில் 1911-ம் ஆண்டு நடைபெற்ற புரட்சியின் 43-வது வருடாந்திர விழாவினை ஒட்டி நடைபெற்ற இராணுவ அணிவகுப்பின் போது பேசுகையில், மார்ஷல் சியாங்-கே-ஷேக், 'சீனாவை கம்யூனிஸ்டுகளின் பிடியிலிருந்து மீட்க இராணுவத்தினர் தங்களைத் தயாராக்கிக் கொள்ள வேண்டு'மென குறிப்பிட்டாராம்.

"சீனத் தாயகத்தை ரஷ்யக் கொள்ளைக்காரர்களிடமிருந்து விடுவிக்க வேண்டும்; கம்யூனிஸ்டுகளிடமிருந்து நமது சுதந்திரத்தை நாம் திரும்பப் பெற வேண்டும்,"

என்று, தனது உரையில் குறிப்பிட்டுவிட்டு மேலும் சியாங் கூறியதாவது :—

"உங்களுடைய தந்தையர், தாய்மார்கள், உற்றார் உறவினர் அத்தனை பேரும், ரஷ்யக் கொள்ளைக்காரர்களிடமும், அவர்களின் கைப்பாவைகளான சூடே, மா-சே-துங் போன்ற கம்யூனிஸ்டு துரோகிகளிடமும் கடந்த ஐந்தாண்டு காலமாக சிக்கிச் சீரழிகின்றனர்; நாம் என் அவர்களைக் காப்பாற்ற முடியாதவர்களாக இருக்கிறோம்?

"நமது தாயகத்தை மீண்டும் பெற நீங்கள் எத்தகைய தியாகமும் புரியத் தயாராக இருக்க வேண்டும்; கம்யூனிஸ்டுகள் நமக்குக் 'கடனாக'த் தரவேண்டிய இரத்தத்தைத் திரும்பத் தருமாறு நாம் செய்ய வேண்டும்," என்று கொக்கரித்திருக்கிறார் எனத் தெரிகிறது.

இராணுவ அணிவகுப்பிற்குப் பின், நடந்த பொதுக்கூட்டமொன்றிலும் சியாங் கலந்துகொண்டாராம். ஏராளமான மக்களும் கூடியிருந்து ராணுவ அணிவகுப்பைக் கண்டனராம்.

## தோழர் ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ. அவர்கட்கு வரவேற்பும் பாராட்டும்

தேன் ஆற்காடு மாவட்டத்தில் காணை-கஞ்சனூர் தொகுதியில் நடைபெற்ற ஜில்லா போர்டுக்கான தேர்தலில் பெருவாரியான வாக்குகளைப் பெற்று காங்கிரசை முறியடித்த தோழர் ஏ. கோவிந்தசாமி எம்.எல்.ஏ. அவர்களுக்கு சென்னையில் குதூகலமான வரவேற்பும் பாராட்டும் வழங்கப்பெற்றன.

**பெரம்பூர் :**

10—10—54 ஞாயிறு காலை 10 மணியளவில் சென்னை பெரம்பூர் லட்சுமி டாக்கீசில் 17-வது வட்ட சவுந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பகத்தின் சார்பில் தோழர் என். வி. நடராசன் தலைமையில் நடைபெற்ற சிறப்புக் கூட்டத்தில் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்களுக்கு சென்னை மாவட்ட தி. மு. கழகச் சார்பில் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களால் மலர் மாலை அணிவிக்கப்பெற்றது. தோழர் கோவிந்தசாமியின் வெற்றியைப் பாராட்டி தலைவரும், தோழர்கள் காஞ்சி கல்யாணசுந்தரம், கண்ணதாசன், ஈ. வே. கி. சம்பத் ஆகியோரும் பேசினர்.

**மீர்சாகிப்பேட்டை :**

அன்று மாலை சென்னை 43-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் மீர்சாகிப்பேட்டையில் தோழர் கன்னியப்பன் தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்திலும் தோழர் ஏ. கோவிந்தசாமி வெகுவாகப் பாராட்டப் பெற்றார். கூடியிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் ஆரவாரப் பேரொலியின் மூலம் தோழர் ஏ. கோவிந்தசாமியின் வெற்றிக்கு மகிழ்ச்சியும் பாராட்டும் தெரிவித்தனர்.

தோழர்கள் இளம்பரிதி, முகவை ஆர். எஸ். பாண்டியன், எஸ். எஸ். ராசேந்திரன், மு. கருணநிதி ஆகியோரும் அன்னாரைப் பாராட்டிப் பேசினர்.

## இந்தியா-இலங்கை ஒப்பந்தம்

## இலங்கை தலைவர்கள் கருத்துக்கள்

புதுடில்லி, ஆக. 11—

"நாடற்றவர்கள் பற்றிய பிரச்சினை ஒத்திப் போடப்பட்டுவிட்டது வருந்தத்தக்கது" என்றும், இலங்கை சர்க்கார் குடிஉரிமை தர மறுக்கும் எல்லா இந்தியர்களும் அப்படியே இந்தியப் பிரஜைகள் ஆகிவிடுவர் என்ற ஏற்பாட்டிற்கு இந்திய சர்க்கார் ஒப்புக் கொள்ளாமல் இருப்பது திருப்திகரமான செய்தியாகும்,"

என்று, தற்போது புதுடில்லியில் ஏற்பட்டுள்ள இலங்கை - இந்தியா ஒப்பந்தம் பற்றித் தனது கருத்தைத் தெரிவிக்கையில், இலங்கை ஜனநாயகக் காங்கிரசின் தலைவர் தொண்டமான் கூறியுள்ளார்.

"இலங்கை சர்க்கார் இப்போது ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி நடந்து கொள்வார்கள் என்று நான் நம்புகிறேன்," என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

இலங்கையின் முன்னாள் பிரதமரான டட்லி சேனநாயகா, "இந்தியா இதைவிட எதும் அதிகமாக ஒப்புக்கொள்ள இயலாது; ஒரு சமயம் இந்த மாநாடு வீணாகும் நிலை காணப்பட்டாலும், இப்போது திருப்திகரமான நிலை ஏற்பட்டிருப்பது கண்டு நான் மகிழ்ந்தாலும், இதைவிட சிறந்த முடிவு ஏற்படுமென்றுதான் நான் எதிர்பார்த்தேன்," என்று குறிப்பிட்டிருக்கிறார்.

"55-வது வயதில் உதவித் தொகையுடன், வேலையில் உள்ள இந்தியர்களை அனுப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது இலங்கை மக்களுக்கு வேலை கிடைக்க சந்தர்ப்பம் அளிக்கதாகும்," என்று சேனாநாயகா மேலும் குறிப்பிட்டார்.

"இந்திய அரசியல் சட்டப்படி சில வகையான இந்தியர்கள்—இலங்கையில் உள்ளவர்கள்—இந்தியக் குடி மக்களாக உரிமை பெற இயலாது; அதே மக்கள், இலங்கை சட்டப்படி, இலங்கைக் குடிகளாகவும் உரிமை பெற இயலாது; இதுபோன்று நாடற்றவர்களாக ஆக்கப்படுவோர் பற்றி இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் பரிசீலனை நடைபெறும் என்பது ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாகும்,"

என்று, இலங்கைத் தூதுக் குழுவில் ஒருவரான இலங்கைக் கல்வி அமைச்சர் எம். டி. பந்தா கூறியுள்ளார்.

## ஆதரவு!

பாரிஸ், அக். 11—

பிரெஞ்சு சோஷலிஸ்டு கட்சியின் நிர்வாக சபை, ஐரோப்பியப் பாதுகாப்பு ஒப்பந்தத்துக்கு ஏகோபித்த ஆதரவு தந்துள்ளதாம்!

### டிராம்வே தொழிலாளர்கள் வேலை நிறுத்தம்!

பிரிட்டிஷ் காலனியான ஹாங்காங்கிலுள்ள டிராம்வே கம்பெனியில், வேலையிலிருந்து நீக்கப்பட்ட 31 தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதற்காக, அக்கம்பெனியைச் சேர்ந்த கம்யூனிஸ்டுத் தொழிலாளர்கள் நேற்று, வேலை நிறுத்தம் செய்தனர் என்று தெரிய வருகிறது.

★

## எனது நன்றி

அன்புடையீர்! வணக்கம்!

தேன் ஆற்காடு மாவட்டக் கழகத் தேர்தலில் காணை-கஞ்சனூர் தொகுதியில் என்னை ஆதரித்து வெற்றி பெறச் செய்த வாக்காளர் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்குச் சலியாது உழைத்த எனது நண்பர்களுக்கும், என்னை ஆதரித்துப் பிரசாரம் செய்த திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரர்களுக்கும், என்னை ஆதரித்து வேலை செய்த, காணை—கஞ்சனூர் தொகுதி திராவிடக் கழகத்திற்கும், கம்யூனிஸ்டு நண்பர்களுக்கும், கட்சிப் பாகுபாடு கருதாது என்னை ஆதரித்த உண்மை காங்கிரஸ் நண்பர்கள் அனைவருக்கும், எனது உளம் கனிந்த நன்றியறிதலை இதன் மூலம் தெரிவித்துக் கொள்கிறேன்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதியை மறந்து, கனம் இராமசாமி அவர்கள், உழைப்பாளிக் கட்சியை காங்கிரசுடன் இணைத்தது சரியா, தவறா என்ற பிரச்சினையில், உழவர் கட்சியின் அபேட்சகனை என்னை பெருவாரியான வாக்குகளால் தேர்ந்தெடுத்ததின் மூலம், வாக்காளர் பெருமக்கள் நல்ல தீர்ப்பளித்திருக்கிறார்கள் என்பதையும் உங்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மந்திரி பதவியைக் காட்டியும், பணபலம் கொண்டும் என்னை எதிர்த்தோரை தோல்வியுறச் செய்து, ஏழையாகிய என்னை காணை—கஞ்சனூர் வாக்காளர்கள் வெற்றிபெறச் செய்தது, மக்கள் சக்தி முன் பதவியோ, பண பலமோ ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதையே குறிக்கிறது என நான் கருதுகிறேன்.

நான் பொதுமக்களின் மேன்மைக்கும், மற்ற மாவட்டங்களைப் போல் தென்னாற்காடும் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க, என்னால் இயன்ற அளவு பாடுபடுவேன் என்று உறுதியளிக்கிறேன்.

வணக்கம்.

சென்னை, 12—10—54

அன்புள்ள,

ஏ. கோவிந்தசாமி

## அரிசி அரைக்கும் இயந்திரங்கள்

### மத்திய சர்க்கார் குழு நியமித்திருக்கிறது

நாட்டில் எத்தனைவிதமான நெல் அரைக்கும் இயந்திர அமைப்புகள் உள்ளன; அவை எப்படி இயங்குகின்றன—என்பதை ஆராய இந்திய சர்க்கார் தோழர்கள் நா. பி. கருணாகர மேனனைத் தலைவராகவும், ஜி. பரமேஸ்வரன் பிள்ளையை உறுப்பினராக உள்ள 6 பேர் கொண்ட குழு ஒன்றை நியமித்துள்ளனர்.

பல்வேறு ரக நெல் அரைக்கும் இயந்திரங்களால் என்ன அனுகூலங்கள் கிடைக்கின்றன; உணவுச் சத்துக்களின் தரம் அவைகளால் எவ்வாறு பாதிக்கப்படுகிறது; மக்கள் எதை விரும்புகிறார்கள்; இத் தொழிலில் எவ்வளவு பேருக்கு வேலை கிடைக்கிறது—என்பதை, இக் குழு பரிசீலிக்கும் என்று தெரிகிறது.

இப்பிரச்சினைகளில் மத்திய, மாநில அரசுகள் எப்படி நடக்க வேண்டும் என்பதையும் இக்குழு சிபார்சு செய்யும் என்று தெரிகிறது.

கைக்குத்தல் [illegible]சிக்கு சர்க்கார் ஆதர[illegible] என்பது எவ்வளவு தூர[illegible] சாத்தியமாகும் என்பதையும் இக்குழுவினரின் புள்ளி விபரங்கள் சர்க்காருக்குத் தெரிவிக்கும் என்று தெரிகிறது.

# பிரெஞ்சிந்திய விடுதலை!

## அதிகாரபூர்வ அறிவிப்பு!

### பிரஞ்சிந்திய மக்களின் கருத்து கோரப்படுகிறது

பாரிஸ், அக். 12—

பிரான்ஸ், இந்தியா ஆகிய இரு நாட்டு அரசாங்கங்களும், இந்தியாவிலிருக்கும் பிரெஞ்சுத் திட்டுகளின் எதிர்காலம் பற்றி ஒரு திட்டவட்டமான முடிவுக்கு வந்துவிட்டன. அவைகள் எடுத்திருக்கிற முடிவு, பிரெஞ்சிந்திய பகுதிகளில் வாழ்வோரால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளின் ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்படும் என்று இங்கு அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

பிரான்ஸ், இந்தியா ஆகிய இரு நாட்டினரும், இதுபற்றி கூட்டாக வெளியிட்டுள்ள குறிப்பொன்றில் காணப்படுவதாவது :—

"இந்தியாவிலிருக்கும் பிரெஞ்சிந்தியத் திட்டுகள் பற்றிய பிரச்சினைக்கு ஒரு திட்டமான பரிகாரம் காணும்பொருட்டு, இந்திய பிரெஞ்சு அரசாங்கங்களின் பிரதிநிதிகள் டெல்லியில் கூடி பேச்சு வார்த்தைகள் நடத்தினர். அதன் விளைவாகக் கீழ்க்கண்ட முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளது :—

"பிரெஞ்சிந்தியாவின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதித்துவ சபையின் எல்லா உறுப்பினர்களும், நகர சபைகளின் உறுப்பினர்களும் புதுச்சேரியில் அக்டோபர் 18-ந் தேதி கூடுவர். அவர்கள், இப்போது இரு அரசாங்கங்களும், பிரெஞ்சிந்தியப் பிரதேசங்கள் குறித்து மேற்கொண்டுள்ள திட்ட வட்டமான முடிவைப் பரிசீலனை செய்து, தங்கள் ஒப்புதலைத் தருவதின் மூலம், இந்தப் பிரச்னையில் பிரெஞ்சிந்திய மக்களின் கருத்தறிவிக்கப்பட வேண்டும்,"

இத்தகவல் பிரான்ஸ் நாட்டின் தலைநகரிலிருந்து இன்று காலை வெளியிடப்பட்டதாகத் தெரிகிறது.

★

புதுச்சேரி, அக். 12—

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலம் பற்றி தீர்மானிக்கப் பிரெஞ்சிந்திய சர்க்கார் இம்மாதம் 18-ந் தேதியன்று, கீழுரில் நடைபெறவிருக்கும் கூட்டத்திற்கு வரும்படி, பிரெஞ்சிந்தியக் கீழ் சபை உறுப்பினர்களையும், தேர்ந்தெடுக்கப்பட்ட நகர சபை உறுப்பினர்களையும் அழைத்திருப்பதாகத் தெரியவருகிறது.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளில் பிரெஞ்சு ஆட்சியே நீடித்திருக்க வேண்டுமா, அல்லது, அவைகள் இந்திய யூனியனேடு சேர்க்கப்பட வேண்டுமா என்னும் பிரச்சினைக்கு ஒரு முடிவு தெரிவிக்கும்படியாக பிரெஞ்சிந்தியாவைச்சேர்ந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனும் ஆகிய 4 இடங்களிலும் உள்ள மொத்தம் 183 உறுப்பினர்களும் கேட்டுக்கொள்ளப் படுகிறார்களாம்.

இந்த 183 பேர்களில் 39 பேர் பிரெஞ்சிந்திய கீழ் சபை உறுப்பினர்களும், மீதியுள்ள 144 பேர்களில் இரண்டு பேர் பிரெஞ்சுக் காரர்களும் ஆவர்.

## ஊறிப்போன அடிமை உணர்வு!

### பிரெஞ்சிந்திய முன்னாள் இராணுவத்தினர் செய்கை!

புதுச்சேரி, அக். 11—

பிரெஞ்சிந்தியப் பகுதிகள் இந்திய யூனியனுடன் இணைவதை எதிர்த்து, பிரெஞ்சிந்திய முன்னாள் இராணுவத்தினர் ஒரு ஊர்வலம் நடத்த இருந்ததாகவும், அந்த ஊர்வலத்தைத் தடை செய்து பிரெஞ்சிந்தியப் போலீஸ் அதிகாரிக[…] உத்திரவிட்டதாகவும் தெரிகி[…]

டிகா[…]க் மேடைகளில் கூட்டம் கூட்டமாக உட்கார்ந்து கொண்டிருந்த அந்த இராணுவக் கோஷ்டியினரை, போலீசார் வெளியேற்றிவிட்டனராம்.

## மலான் விலகுகிறார்

### நிக்கோலஸ் ஹாவெங்கா புதிய பிரதமர்

பிரிடோரியா, அக். 12—

தென் ஆப்பிரிக்கப் பிரதம மந்திரியான டாக்டர் டேனியல் மலான் வருகிற நவம்பர் 30-ந் தேதியன்று தனது பதவியை விட்டு விலகி ஓய்வு பெறுவார் என அறிவிக்கப்படுகிறது.

சென்ற இரவு நடைபெற்ற மந்திரி சபையின் விசேடக் கூட்டத்திற்குப் பிறகு பிரதம மந்திரியின் அலுவலகம், 80 வயது நிரம்பிய தேசியக் கட்சியின் தலைவரும், பிரதம மந்திரியுமான மலான் விலகுவது பற்றிய செய்தியை அறிவித்தது.

இப்போது உதவிப் பிரதம மந்திரியாயும், நிதி மந்திரியாயுமிருக்கிற 72 வயதுடைய நிக்கொலஸ் ஹாவெங்கா, முதன் மந்திரியாகக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதமர் மலான், பத்திரிகை நிருபர்களுக்களித்தப் பேட்டியொன்றில், "தேக நிலைமை போன்ற சில காரணங்களால் பதவியை விடும் நிலை ஏற்படும் வரையில் ஒரு தலைவன் காத்துக் கொண்டிராமல், எப்போது தன்னுடைய பதவியிலிருந்து தானகவே விலகிக்கொள்ள வேண்டுமென்று அத் தலைவனுக்குத் தெரிந்திருக்கவேண்டும்; நான் இன்னும் இந்தப் பதவியிலிருந்து கொண்டு செய்யவேண்டிய காரியங்கள் ஏராளமாக இருந்தாலும், இதுகாலம் வரையிலும் நான் செய்துமுடித்த காரியங்களை மட்டும் நினைத்துக்கொண்டு திருப்தியடைந்து கொள்கிறேன்," என்று கூறினார்.

## பாகிஸ்தானில் பலப் பரீட்சை!

### மந்திரி சபையில் மாறுதல்?

பாகிஸ்தான் மந்திரி சபையில் புரட்சிகரமான பெரிய மாறுதல்கள் ஏற்படலாம் என்றும், அவாமி லீகின் தலைவர் சுகரவர்த்தியின் தலைமையில் கிழக்கு பாகிஸ்தானில் ஒரு இடைக்கால அரசாங்கம் ஏற்படுத்தப்படலாம் என்றும் யூகங்கள் கிளம்பியிருப்பதாகத் தெரியவருகிறது.

மேற்கு பஞ்சாபின் பிரதமரான பிரோஸ்கான் நூன், சுகரவர்த்தியை ஆதரிப்பதாகவும், பாக். மந்திரி சபைக்கும், சுகரவர்த்திக்கும் இடையே இம்மாத இறுதிக்குள் பலத்த பலப் பரீட்சை நடக்கலாம் என்றும் வெகு நிச்சயமாக எதிர்பார்க்கப்படுகிறது.

## 30,000 தமிழர் உடனடியாக......

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இந்தியர் பதிவு செய்யப்பட்ட பின்னர், அவர்களுக்கு இலங்கை மத்திய மக்கள் சபையில் பிரதிநிதித்துவம் அளிக்க, இடைக்காலத் தேர்தல் ஒன்று நடத்தப்படவும்கூடும்,"

இன்று காலை 11-30 மணிக்கு கொத்தலாவலை கொழும்பு திரும்பினர்.

"இதுவரையில் இலங்கைக் குடிமக்களாகப் பதிவு செய்துகொண்டுள்ள இந்தியர்களுக்கு இலங்கை பாராளு மன்றத்தில் பிரதிநிதித்துவம் அளிக்க உபதேர்தல்கள் நடைபெறுமா?" என்று கேட்டபோது, "போதுமான அளவுள்ளவர்கள் இருந்தால் உபதேர்தல்கள் நடைபெறலாம்," என்று கொத்தலாவலை பதில் அளித்தார்.

'நாடற்றவர்கள்' பிரச்சினைபற்றி கேட்டபோது, "இரண்டு ஆண்டுகளுக்குள் இவர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்துபோய் விடு"மென்று கூறி, இந்தியாதான் இவர்களது முழுப் பொறுப்பையும் ஏற்கவேண்டு மென்று டில்லியில் தாங்கள் கூறியதாகவும், ஆனல் அது இயலாது என்று கூறப்பட்டதாகவும், இலங்கை மண்ணிலே இவர்கள் இருப்பதால், 'நாடற்றவர்கள்' பிரச்சினை இலங்கைக்குத்தான் அதிக தொல்லை தரும் பிரச்சினை," என்று அவர் மேலும் கூறினர்.

"நாடற்றவர்கள் எனப்படுவோர் பற்றிய பிரச்சினைகளைச் சிந்திக்காது, அப்படியே இரண்டு ஆண்டுகளுக்கு என் ஒத்திப்போட்டு விட்டீர்கள்?" என்று கேட்டபோது, இலங்கைப் பிரதமர், "நாங்கள் வேறு என்ன செய்யமுடியும்?" என்று கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது :—

"இப்போது யாரும் நாடற்றவர்கள் என்ற நிலைக்கு உட்பட வேண்டியதில்லை; ஒன்று அவர்கள் இலங்கையராகலாம்; அல்லது, இந்தியக் குடிமக்களாகலாம்; இந்தியக் குடிமக்களாக இருப்பதிலும் நன்மையிருக்கிறது; அவர்களுக்கு 55 வயது வரையில் இங்கே வேலை உண்டு; தேவைப்படும்போது இந்தியா செல்லவும், பணம் அனுப்பவும் வசதிகள் உண்டு; இந்த வசதிகள் எல்லாம் 'நாடற்றவர்கள்' என்போருக்குக் கிடையாது. இப்போது சுமார் 20,000 - முதல், 30,000 பேர் வரை 55 வயதுக்கு மேற்பட்டோர் உள்ளனர்; இவர்களுக்குக் 'கிராஜுடி' என்னும் உதவித் தொகை சுமார் ரூ. 6 லட்சம் சேரவேண்டியிருக்கிறது. இப்போது இவர்கள் தங்கள் பணத்துடன் இந்தியா செல்லத் தடை எதும் இல்லை," என்றார்.

குடிஉரிமைப் பதிவு அதிகாரியின் ஒழுங்கற்ற சுற்றறிக்கையினல், ஏராளமான குடிஉரிமை மனுக்கள் நிராகரிக்கப்பட்டதென்றும், இந்த நிலையைப் போக்கத் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கொத்தலாவலை உறுதியளித்துள்ளார்.

தற்காலிக வாச பர்மிட்டுகள் உள்ள இந்தியர்கள் பற்றிய பிரச்சினை புதிய ஒப்பந்தத்தினல் எதும் மாற்றமடையவில்லை என்றும், அவர்கள், தங்கள் வாசகால அனுமதி தீர்ந்தவுடன் இந்தியாவுக்குச் செல்ல வேண்டியதுதான் என்றும் கொத்தலாவாலை குறிப்பிட்டு, இதுவரையில் ஆருயிரம் பேர் இந்தியாவிற்குத் திரும்பிவிட்டனர் என்றும் குறிப்பிட்டார்.

இப்போதைய ஒப்பந்தப்படி இரண்டு ஆண்டுகளுக்குள், 'நாடற்றவர்கள்' எண்ணிக்கை மிகவும் குறைவாக இருக்குமென்று [நம்]பப்படுவதால், அப்போது மீண்டும் இப்பிரச்சினை புனராலோசனை செய்யப்படும் என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இறுதியாகப் பேசுகையில், கொத்தலாவலை, இலங்கை சர்க்கார், இந்தியர்கள் பிரச்சினையை மனிதாபிமானத்துடன் கவனிக்குமென்றும் உறுதியளித்தார்.

## இந்தியா நான்காவது ⁂

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

**பஜார் ரோடில் விழுந்து மரணமடைந்தார்,' என்ற செய்தியும் வெளிவந்துள்ளது;**

**"திருப்பதி குடை பிடித்து ஊர்வலம் வந்து உயிரை விடுகிற பக்தர்களைக் கொண்ட இந்த நாடுதான், 'எதிர்காலத்தில் நான்காவது வல்லரசாக விளங்கும்,' என்று பண்டிதர் கூறுகிறார்; எப்படி இருக்கிறது பாருங்கள்? இந்த இரு செய்திகளையும் படிக்கிற ஒரு வெளிநாட்டுக்காரன் எள்ளி நகையாடமாட்டானா? திருப்பதி குடை பிடித்து, 'கோவிந்தா' போட்டு, வழியிலே உயிரை விடுகிறவர்கள் நிறைந்த நாடு, 'எதிர்காலத்தில் நான்காவது வல்லரசாக விளங்கும்' அருகதை பெற்றதுதானு?**

**"திருப்பதி குடை பிடிப்பதும், கும்பமேளா நடப்பதும், கும்பகோணத்தில் மகாமகம் நடைபெறுவதும் உலக சம்பிரதாயங்களா? இந்த அநாகரீகமான சடங்குகள்தான் உலக வல்லரசாவதற்கு உரிய தகுதியைத் தந்திருக்கின்றனவா?"**

—இவ்வாறு, தோழர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை மீர்சாகிப் பேட்டையில், 10—10—54-ல் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

தொடர்ந்து அவர் பேசியதாவது :—

"மக்களை மதியாதோர் மண் மூடிப் போவார்கள் என்பதற்கு திருச்சி லால்குடி வாக்காளர்களும் தென்னற்காடு, கஞ்சனூர் வாக்காளர்களும் அங்கு நடைபெற்ற ஜில்லா போர்டு தேர்தலில் தந்த தீர்ப்பே போதுமானதாகும்.

லால்குடி தொகுதியில் ராஜா சிதம்பரம் என்ற பெரும் பணக்காரர், ஆண்டாண்டுக் காலமாய், ஜில்லா போர்டிலே ஆதிக்கம் செலுத்தியவர்—போட்டியிட்டார்; எப்படி? கடந்த பொதுத் தேர்தலிலே, காங்கிரசை எதிர்த்து, தி. மு. கழக ஆதரவு பெற்று, தேர்தலில் சட்ட சபை உறுப்பினரானர்; சம்பவம் நடந்து இரண்டாண்டுக் காலம்தான் ஆகியுள்ளது; அதற்குள், 'காங்கிரசே மக்களை வாழ்விக்கும்' என்ற புதியதொரு 'ஞானேதயம்' பெற்று, தான், பொதுத் தேர்தலில் மக்களுக்குத் தந்த வாக்குறுதியை காற்றில் பறக்கவிட்டு, ஐக்கிய முன்னணியை மறந்து, காங்கிரஸ் சார்பில், காளை 'மாட்டுச் சின்னத்துடன் ஜில்லாபோர்டு தேர்தலில் நின்றார்; அவரை எதிர்த்து தோழர் அம்பில் தருமலிங்கம் என்ற தி. மு. கழகத் தோழர்—கல்லக்குடி போரிலே கலந்து கொண்டவர்—திருச்சி மாவட்ட தி. மு. கழக செயலாளர்—சுயேச்சையாக நின்றார்; இன்னும் நால்வரும் ராஜா சிதம்பரத்தை எதிர்த்து நின்றார்கள்; பெரும் பணக்காரரான ராஜா சிதம்பரம் மண் கவ்வினர்; சாதாரணமான தோழர் அம்பில் தருமலிங்கம் வெற்றிவாகை சூடினர். இதற்குக் காரணம் என்ன? கடந்த தேர்தலில் ராஜா சிதம்பரம் தந்த வாக்குறுதிகளை மறந்ததால், மக்களை துச்சமென மதித்ததால், மக்கள் நல்லபாடம் கற்பித்திருக்கிறார்கள் என்பதுதானே!" என்று கூறிய தோழர் கருணாநிதி அவர்கள், தி. மு. கழக லட்சியம் குறித்தும், அதன் வளர்ச்சி குறித்தும் விளக்கிவிட்டு, நாட்டில் நிலவும் அரசியல் நிலைகள் குறித்தும் விரிவாகப் பேசினர்.

## மாணவர்கள் பொறுமை கண்டு ஆச்சரியப்படுபவர்!

### அவர்கள் ஒழுக்கமுடன் நடக்கவும் உபதேசிக்கிறார்!

### மந்திரி சுப்பிரமணியம் பேசுகிற விசித்திரம்!

"கல்லூரி மாணவர்களின் அளவு கடந்த பொறுமை எனக்கு உண்மையிலேயே ஆச்சரியமூட்டுகிறது; அவர்களிலே பலர், கல்லூரிகளில், போதனு மொழியாக உள்ள ஆங்கிலத்தில் நடைபெறும் வகுப்புகளைப் புரிந்துகொள்ள முடியாதவர்களாயிருக்கிறார்கள்;

"கல்வி நிபுணர்களும் கல்வி அதிகாரிகளும், கல்லூரிக் கல்வியின் தரம் குறைந்துவிட்டது எனக் குறைப்பட்டு என்ன பயன்?

"மாணவர்கள் உயர்நிலைப் பள்ளிகளில் முழுவதும் தமிழ் மொழியையே போதனு மொழியாகக் கொண்டு கல்வி பயிலுகிறார்கள்; கல்லூரிகளுக்குச் சென்றதும் ஆங்கிலத்தில் பாடங்கள் பயில வேண்டியவர்களாயிருக்கிறார்கள்; இந்தக் கஷ்டம் இருக்கும்போது எங்ஙனம் கல்லூரிக் கல்வியின் தரம் உயர முடியும்?

"எனவே, கல்வி நிபுணர்கள் உடனடியாகத் தீர்மானிக்க வேண்டியது, உயர்நிலைப் பள்ளியில் முதல் படிவத் துவக்க முதல், கல்லூரிப் படிப்பு முடியும் வரை போதனு மொழியாக தமிழ் இருக்க வேண்டுமா ஆங்கிலம் இருக்க வேண்டுமா என்பதுதான்,"

என்று சென்னை நிதி மந்திரி கனம் சுப்பிரமணியம், கும்பகோணம் சர்க்கார் கல்லூரியின் நூற்றாண்டு விழா நினைவுக் கட்டிடத்தின் அஸ்திவாரக் கல் நாட்டுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும், "மாணவர்கள், தங்களின் நன்னடத்தையையும், ஒழுக்கத்தையும் கெடுக்கிற தீயகளிலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும்," என்றும் குறிப்பிட்டார்.

## டிராம் போக்கு-வரத்து

### சர்க்கார் ஏற்று நடத்தாது!

### மந்திரியின் கைவிரிப்பு!

"டிராம் சர்வீசை, மீண்டும் ஏற்று நடத்துவதற்கு சர்க்காருக்கு யோசனை ஒன்றும் கிடையாது,"

என்று, சென்னை மாநில அறநிலைய, போக்குவரத்து அமைச்சர் பரமேஸ்வரன், கோவையில், பத்திரிகை நிருபர்களிடம் தெரிவித்திருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், சர்க்கார் அதை ஏற்று நடத்தாவிட்டாலும், தனிப்பட்டோர் அதை ஏற்று நடத்தினல், அதில் சர்க்கார் குறுக்கே நிற்காது என்றும் தெரிவித்திருக்கிறார்.

சென்னை நகரில் பஸ் போக்குவரத்துக்களை இன்னும் விரிவாக்க, புதிதான பஸ்கள் வாங்க, 'ஆர்டர்' கொடுத்திருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.